[1994 ஏப்ரல் 18

முற்பகல் 10.55

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய எங்கள் மாவட்டமான தர்மபுரி மாவட்டத்தை இன்றைக்கு எல்லாத் துறைகளிலும் முன்னேறி வருகின்ற ஒரு மாவட்டமாக ஆக்கிக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மாவட்டமான தர்மபுரி மாவட்டத்திலே இறால் வளர்ப்பதற்கு நல்ல பயிற்சியை உழவர்களுக்குக் கொடுத்தால், அது அவர்களுடைய வாழ்க்கை வளம் மேம்படுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இறால் பண்ணைகளை நல்ல தண்ணீர் இருக்கின்ற அணைப் பகுதிகளில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கு அடுத்த ஆண்டாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இறால் பண்ணையோ அல்லது இறால் வளர்ப்புத் தொழிலோ கடற்கரையை ஒட்டித்தான் இதை அமைக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிருஷ்ணகிரி அணை, பாரூர் ஏரி, ஒகேனக்கல் ஆகிய இந்த உள்நாட்டு மீன்வளப் பகுதிகளிலே இறால் பண்ணை அமைக்க வேண்டுமென்ற கருத்தை இங்கே சொன்னார்கள். உள்நாட்டில் இறால் வளர்ப்பதிலே ஒரு சிறிய சிக்கல் என்னவென்றால் Mother-brooder என்று சொல்லக்கூடிய அந்தத் தாய் இறால் கிடைப்பதற்கு மிகவும் அரிதாக இருக்கின்ற காரணத்தினால் உள்நாட்டு நீர் நிலைகளிலே இறால் வளர்ப்பதற்குப் போதிய சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் Micro Pranchim Possum Bulki என்று சொல்லக்கூடிய அந்த இறாலை வளர்ப்பதற்கு தனியார்கூட முன் வந்தால் அவர்களை ஊக்குவிப்பதற்காக, அந்தக் குஞ்சுப் பொரிப்பகம் அமைப்பதற்கு 2 லட்சம் ரூபாய் அளவிற்கு மானியம் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். எனவே, அந்த இடத்தில் யாரும் தனியார் முன் வந்தால் அவர்களுக்கு குஞ்சுப் பொரிப்பகம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க, அவர்களுக்கு மானியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

284–

குளச்சலிலிருந்து சென்னைக்கு நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குதல்.

22286–திரு. ஆ. பாலையா:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 ஏப்ரல் 18]

(அ) குளச்சலிலிருந்து சென்னைக்கு நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

285–

திருவட்டார் தொகுதி, அருமனையிலிருந்து மதுரைக்குப் பேருந்து இயக்குதல்.

***24644-திரு. இரா. அப்பு நடேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவட்டார் தொகுதி, அருமனையிலிருந்து திருவரம்பு குலசேகரம் வழியாக மதுரைக்குப் பேருந்து இயக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

286--

பச்சைமலைப் பகுதியில் கிராமங்களுக்கு மின்வசதி அளித்தல்.

***19118-திரு. வி. ரவிச்சந்திரன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சி மாவட்டம், பச்சைமலைப் பகுதியில் மின்சார வசதி பெறாத பதினாறு கிராமங்களுக்கு எப்போது மின் வசதி செய்து தரப்படும்?